விலை: சதம் 60


பெண் விற்பனையாளர்கள்

**தேவை**

புடவை ஸ்தாபனத்திற்கு அனுபவம் வாய்ந்த பெண் விற்பனையாளர்கள் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**சீ வ ம் ஸ்**

14 ஏ, மின்சாரநிலைய வீதி
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

0255



# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 ஆனி 25 றம்ழான் 6 இதழ் 145

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9-7-1981



பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது

0 புரூஸ் லீ போஸ்டர்
0 சைட் பொக்ஸ்
0 அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசங்கள்
0 HERO சைக்கிள்கள்
0 விண்ட்ஸ் ஸ்கிறீன்

**பல்கன் ஏஜென்சி,**
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685


## யாழ். வன்செயல்களினால்

# பாதிக்கப்பட்டவர்களுக்கு

# ஜனாதிபதி நிதியிலிருந்து உதவி

## அமைச்சரவை முடிவு

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து உதவி வழங்குவதென்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.**

யாழ். வன்முறைச் சம்பவங்களின் போது மக்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்ட சேதம் குறித்து மதிப்பிடு செய்வதற்கு குழு ஒன்றை நியமிப்பதென்றும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இந்தக் குழுவின் மதிப்பீட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓரளவு நஷ்டஈடு வழங்குவதென்றும் அமைச்சரவை தீர்மானித்தது. ]இ

# யாழ். வன்செயலை விசாரிக்க ஆணைக்குழு நியமிக்க முடிவு

[கொழும்பு]

கடந்த மே 31ந் திகதியும், ஜூன் 1ந் திகதியும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதென்று அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் இம் முடிவுகளை அமைச்சரவைப் பேச்சாளரும், ராஜாங்க அமைச்சருமான திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இவ்விசாரணைக் கமிஷனுக்கு ஒவ்வொருவரைத் தெரிவுசெய்யும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பியிருந்தார். ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை; தமிழர் விடுதலைக் கூட்டணியிடமிருந்து இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

ஜனாதிபதியும் அரசாங்கமும் நீட்டும் நேசக் கரத்துக்கப்பால் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நாட்டுப் பிரிவினை பற்றியும், அரசாங்கத்துக்கெதிராக— அரசைத் தூற்றும் விதத்தில் பிரசாரங்கள் மேற்கொள்வது குறித்தும் —

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் வெளி நாடுகளுக்குச்சென்று அரசாங்கத்துக்கெதிராக விமர்சிப்பதோடு நாட்டுப் பிரிவினை சம்பந்தமாகவும் பேசியதுடன், அரசாங்கத்துக்குத் தெரியாதவிதத்தில் சர்வதேச உதவிகளைப் பெறுவது குறித்தும், நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

சில அமைச்சர்கள் கடந்த மேமாதம் 31ம் திகதியும் ஜூன் 1ம் திகதியும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து வன்முறைகளைத் தூண்டிவிட்டார்கள் என்று தவறான வதந்திகள் பரப்பப்பட்டுள்ளன—

இந்த அமைச்சர்கள் தேர்தலுக்கு முதல்நாளான ஜூன் 3ம் திகதிக்கு முதல் யாழ்ப்பாணம் செல்லவில்லை.


உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம், 26ந் திகதி [10-7-81] வெள்ளிக்கிழமை இரவு 2-30 மணிக்கு மேலுள்ள சுப முகூர்த்தத்தில்,

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **சுந்தரேசன்** | **சிவகௌரி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

**தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில்**

நடைபெறும் திருமணத்திற்கும்,

11-7-81 சனிக்கிழமை நண்பகல் மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திற்கும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை)

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள

| | |
|---|---|
| க. பெ. மு. கனகசபாபதி | இ. மு. சிவரத்தினம் |
| தம்பதிகள் | தம்பதிகள் |
| வியாபாரிமூலை, | வியாபாரிமூலை, |
| பருத்தித்துறை. [0266] | பருத்தித்துறை. |


## யாழ். தேர்தல் முடிவுகளை

# வர்த்தமானியில் வெளியிடுவதில் இழுபறி!

[கொழும்பு]

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் முடிவுகளை வர்த்தமானி மூலம் வெளியிடுவதில் தேர்தல் திணைக்களத்துக்கும் அரசாங்க அச்சகத்துக்குமிடையே இழுபறி ஏற்பட்டுள்ளது.

எனினும் இன்னும் ஓரிரு தினங்களில் யாழ். தேர்தல் முடிவுகளை வர்த்தமானியில் வெளியிடுவதாக அரசாங்க அழுத்துனர் உறுதியளித்துள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித்

[6-ம் பக்கம் பார்க்க]

## பரமேஸ்வரன் உடலிலிருந்து 4 சன்னங்கள் எடுக்கப்பட்டன

### டாக்டர் சாட்சியம் 'கொலை' எனத் தீர்ப்பு

[யாழ்ப்பாணம்]

பரமேஸ்வரன் உடலிலிருந்து 4 துப்பாக்கிச் சன்னங்கள் வெளியில் எடுக்கப்பட்டன. அத்துடன் அடைப்புச் சக்கைகளும் எடுக்கப்பட்டன.

நீர்வேலியில் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான விவசாய உத்தியோகத்தர் பரமேஸ்வரனின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ரஞ்சினி ராஜராஜேஸ்வரன் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு

[6-ம் பக்கம் பார்க்க]


# ஹோம் பினான்ஸ்

## லிமிட்

82, கன்னாதிட்டி, (போன்: 8310) யாழ்ப்பாணம்.

ரூபா-1000-க்கு மேற்பட்ட ஒருவருட வைப்பிற்கு ஆகக்கூடுதலான வட்டியை வழங்குகிறது.

வருடம் 30% வட்டியை

வருட முடிவில் வழங்கும்

அல்லது

வருடம் 28% வட்டியை

மாதாமாதம் வழங்கும்.

இடைப்பட்ட காலத்தில் வைப்புப் பணத்தை மீளப்பெறுவோர்க்கு எதுவித வட்டிக் கழிவும் செய்யப்படமாட்டாது.

உங்கள் பணத்தை விவேகமாக முதலீடுசெய்யுங்கள்.

தலைமையகம்: 463, காலி வீதி, கொழும்பு-3

தொலைபேசி: 89190

**VACANCIES IN AN 'A' GRADE CINEMA IN JAFFNA TOWN**

Manager:- Educated, retired person between 40 and 55 Experience not necessary.
Accounts Clerk: Retired person with experience in accounting
Cashier: Responsible person with good family background and G C. E. O/L.
Booking Clerks ) and ) G. C E O/L Checkers )
Hall boys and Car and ) Hardworking and Cycle Park Attendants ) energetic persons with J S C

Applications should be accompanied by one copy of recent photograph and copies of testimonials and should be addressed to:-
NO: 0250,
C/O, Eelanadu Ltd, — Jaffna.
to reach them on or before 20-7-81.
Selection will be absolutely on merit
Canvassing in any form will be a definite disqualification, and no personal callers. 0250

# வரி விளம்பரம்

## வகுப்புக்கள்

மின் இணைப்பு, மோட்டார் இயந்திரவியல், மின் ஒட்டுத் தொழில் நுட்பவியல் (Electrical Wiring, Motor mechanism Electrical Welding) 4 மாத செய்முறை அறிமுறைப் பயிற்சி வகுப்புகள் 11-7-81இல் ஆரம்பம். தங்குமிட வசதியும் உண்டு. C E T யாழ்ப்பாணக் கல்வி நிலையம், (சாந்தி சினிமாவிற்கு முன்னால்) 22, இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். [0175]

## விற்பனைக்கு

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் சகல வசதிகளும் கொண்ட 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு விலை நியாயமாக பேசித்தீர்மானிக்கலாம். உடன் தொடர்பு கொள்ளவும். வ. புவனேஸ்வரன், சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டை. 0249

புத்தம் புதிய N V. 7000 நாஷனல் வீடியோவும் அத்துடன் ரிமோற் கொன்ரோல் உடன் கூடிய 12 விதமான புரோக்கிரும் பதிவு செய்யக் கூடியதுமானது விலைக்கு உண்டு க. சந்தவனம், சந்தவனப்ஸ், நல்லூர் மார்க்கட், யாழ்ப்பாணம். 0247

## வெற்றுச்சாக்கு விற்பனைக்கான கேள்விப்பத்திரம்

கரைதுறைபற்று ப. நோ. கூ. சங்கம் 4000 (நாலாயிரம்) வெற்றுச் சாக்குகளைக் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. இச் சாக்குகள் கேள்வி கோர விரும்புவோர் 31-7-81 ந் திகதிக்கு முன்னதாக தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்கு கேள்விப்பத்திர விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் சாக்குக் கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி கோருவோர் மீளப்பெறக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- இச்சங்கத்தில் கட்டிப் பற்றுச் சீட்டைப்பெற்றுக் கொள்ளவும் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய காரியாலய நாட்களில் எமது முல்லைத்தீவு ஸ்டோரில் பார்வையிடலாம். சாக்கை நீங்கள் பார்வையிட்டே தரம்பிரித்து விலை நிர்ணயித்து எமக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் அனுப்பிய விலைப்படியே தெரிவு நடைபெறும். தெரிவு செய்யப்பட்டவர் சாக்கைப் பெறும்போது விலையிலோ, சாக்கிலோ எதுவித மாற்றமும் செய்ய அனுமதிக்கபடமாட்டாது.

பொதுமுகாமையாளர்,
4. 7. 81 0244



## ஓராண்டு நிறைவு அஞ்சலி

தோற்றம்: 19-10-1938
மறைவு: 21-6-1980

பிறப்பிடம்:
வட்டுக்கோட்டை
வசிப்பிடம்
மண்டைதீவு

**கந்தையா கனகரத்தினம்**

என்னைத் தனிமையில் தவிக்கவிட்டுத் தெய்வீகம் அடைந்த என் அன்புத் தெய்வமே! உங்கள் நீங்காத நினைவு எங்கள் நெஞ்சத்தை விட்டகலாது. பிரிவு என்ற காலம் என் கோலத்தை மாற்றி விதவை என்ற போர்வை அணிந்து காலமெல்லாம் கண்ணீரில் ஆழ்த்திவிட்டது. தாயாய், சேயாய், தந்தையாய் எங்கள் வாழ்வில் விடிவெள்ளியாகத் திகழ்ந்த ஒளி வெள்ளமே உங்கள் ஆத்மா சாந்தியடைய நெஞ்சுருக நினைந்துருகி இறைவனை வேண்டி அஞ்சலி செய்கிறோம்.

இங்ஙனம்
உங்கள்பிரிவால் வருந்தும்
அன்பு மனைவி,
சகோதர, சகோதரிகள்
0243

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கூறுவிலை அறிவித்தல்

இதன் கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரால், கீழே குறிப்பிடப்படும் மர வகைகள் வழங்குவதற்காக கூறுவிலைகள் கோரப்படுகின்றது.
கூறுவிலைகள் யாவும் அரக்கு முத்திரையிடப்பெற்று, எதிர்வரும் 81-07-15 ந் திகதி பிற்பகல் 03-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

கிளிசப்பு
2''-1'' — 5000 நீட்டல் அடி (லீனியர் அடி)
2''-2'' — 1000 ''
10''-1'' — 1000 ''
12''-1'' — 2000 ''

பாலை
2''-2'' — 200 ''
3''-2'' — 200 ''
3''-3'' — 400 ''
4''-2'' — 500 ''
4''-3'' — 500 ''

முதிரைப்பலகை
12½'' — 500 ''
12''-1'' — 500 ''

மேற்கூறிய மரவகைகளின் நீளம் 10 அடி தொடக்கம் 15 அடி வரை இருத்தல் வேண்டும்.

பனை
2''-1'' சிலாகை — 500 நீட்டல் அடி
4''-2'' கைமரம் — 1000 ''

குறைந்தது 14 அடி நீளம் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்.
81-07-07. (0258)

## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்

1981 ஆம் வருடத்திற்கான கிறவல் (மக்கி)

# கூறுவிலை அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றத்திற்கு 1981 ஆம் வருடத்திற்கு கிறவல் (மக்கி) விநியோகிப்பதற்கான கூறுவிலைகள் விநியோகஸ்தர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

கூறுவிலைகள் சமர்ப்பிப்போர் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 22-07-81 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் தங்கள் கூறுவிலை விபரங்களை 23-07-81 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

கூறுவிலை அனுப்பும் கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு, "மராமத்துப் பகுதி 1981 ஆம் ஆண்டிற்கான கிறவல் (மக்கி) கூறுவிலை" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல்வேண்டும் மேலதிக விபரங்கட்கு யாழ்ப்பாண மாநகர மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

க. சிவஞானம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்.

வேலைப் பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
06-07-81. 0245

# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 1228

கணவதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை,
வண்ணார்பண்ணை மேற்கு, ஆறுகால் மடத்தடி,
யாழ்ப்பாணம்.

வழக்காளி

எதிராக

1. சுப்பிரமணியம் தியாகராசாவும்
2. பெண் கமலாதேவியும்,
வேலணை கிழக்கு, தற்போது மாவட்ட நீதிமன்றம், வவுனியா.

எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 1228-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1981-ம் வருஷம் யூலை மாதம் 31-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். (31-7 81)

## தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 8000/- பின் 27-8-79 தொடக்கம் 31-7-80 வரைக்கும் ரூபா 5000/-க்கு 10% வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 614 சதம் 90.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணை கோவிற்பற்று வேலணை இறை "கும்மாட்டிபுலமும் ஆலம்புலமும்" பரப்பு நெல் இலாச்சம் ஐந்து குளி பத்தரை (பர நெல் இலா 5 குளி 10½) கல்வீடும் பனைகளும், தென்னைகளும் மற்றும் பயிர்வகைகளும் இதற்கு எல்லை கிழக்கு சிவசம்பு பெண் பாக்கியத்தினதனம், வடக்கு சபாரத்தினம் தியாகராசா பெண் கமலாதேவியின் ஆதனம், மேற்கு முடிக்குரிய காணி, தெற்கு அருணாசலம் சிவகுருநாதனின் ஆதனம். (பதிவு சி. 326/113.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனவு ஆணையாளரும் விலைமதிப்பாளரும்.

விதானை வளவு,
சித்தங்கேணி,
21-05-81. (0259)

# கூட்ட அறிவித்தல்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின்
ஆண்டுக்கூட்டம்
26-7-81 ஞாயிறு காலை 9-30 மணிக்கு
யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி
பாரதி பாஷிய வித்தியாலயத்தில்
நடைபெறும்.

1980-ம் ஆண்டுச் சந்தா கொடுத்தவர்களுக்கு உறுப்புரிமை அட்டை வழங்கப்படும்.
அட்டையும், கூட்ட அறிவித்தலும், ஆண்டறிக்கையும் 14-7-81க்கு முன் கிடைக்காவிடின் உறுப்பினர், செயலாளருடன் 20-7 81க்கு முன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

உறுப்புரிமை அட்டையுடன் வருபவர்கள் மட்டுமே கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவர்.

கா. விசுவலிங்கம்,
செயலாளர்.

74, பசல்ஸ் ஒழுங்கை,
கொழும்பு 6,
8-7-81. (0246)

# அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)
சுன்னாகம்

சங்க எல்லை பரப்பிற்குட்பட்டவர்களிடமிருந்து கீழ்க்காணும் பதவிகட்காய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொதுலிகிதர் தரம் II
சிட்டை லிகிதர் தரம் II
கிளை முகாமையாளர் தரம் III
கிளை முகாமையாளர் தரம் II
விற்பனையாளர்
பால் சுற்றுநர்
காவலாளி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் 18-7-81 திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிப்போர் விண்ணப்ப படிவங்களையும் விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்.
7-7-81. (253

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

மணி வாக்கு

"நீதியால் அவஸ்தைப் படுவதைவிட அநீதி செய்வதுதான் இன்னும் அவமானகரமானது"
— பிளேட்டோ.

# நமது நோக்கு

## பசையற்ற பிரசாரம்

சிறுநெறியைக் கையாண்டு பெரிய குறியை அடைந்துவிட முடியாது.

நிரூபிக்கவேண்டிய அவசியமற்ற உண்மை இது.

இவ்வருடம் இலங்கை மக்கள் சர்வஜன வாக்குரிமை பெற்ற ஐம்பதாவது ஆண்டு. இந்தப் பொன்விழா வைபவங்கள் பல இறப்பட்ட தோற்றங்கள் கொண்டிருக்கின்றன.

1931ம் ஆண்டு ஜூலாய் 7ம் தேதி சர்வஜன வாக்குரிமை பெற்ற மக்கள் தேர்ந்தெடுத்த அரசாங்க சபை கூடிய வரலாற்றுமிக்க தினம். இம்மாதம் அதே தேதியில் இடம்பெற்ற விழா முத்திரைவெளியீட்டு விழாவாகும்.

இருவித முத்திரைகளை — ஏழு ரூபாவிலும், ஐம்பது சதத்திலும் — இந்த வரலாற்றுமிக்க தினத்தை நினைவுபடுத்த பிரதமர் ஆர். பிரேமதாசா வெளியிட்டு வைத்தார்.

ஐக்கியதேசியக் கட்சியின் அலங்காரக் கட்டுக்கோப்பு சர்வஜன வாக்குரிமை என்ற அத்திபாரத்திலேயே எழுப்பப்பட்டதென்ற கருத்தை இந்த நிகழ்ச்சியின் நிரூபிட்டினார். வடபகுதி மக்களுக்கு வியப்பூட்டும் செய்தி இது.

மக்களை — தனிமனிதன் ஒவ்வொருவனையும் கொண்ட —கட்டிடப்பொருளாகக் கொண்ட ஒரு ஐனநாயக மக்கள் ஆட்சியின் சாத்தான சின்னம் ஆரம்பத்தில் இந்தக் கட்டிட வேலையில் ஈடுபட்டது ஐ.தே. கட்சி என்பதை எவரும் மறுப்பதற்கில்லை

ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் இவ்விழ விற்கு பொருத்தமான சின்னம் முத்திரையாயிருந்தால், அதற்கு அதியாவசியமான வஸ்து பசைவென்பதை பிரதமர் மறந்திருக்கலாம்

தந்தி, தபால் போக்குவரத்துக்கு முத்திரை எவ்வளவு அவசியமோ, முத்திரைக்கு அவ்வளவு அவசியமானது பசை. இலகாலமாக—கடந்த ஆட்சியிலும் கூட — பசைக்குப் பெருந் தட்டுப்பாடு இருப்பது எந்தத் தபால் நிலையத்திலும் நாம் பெறும் அவல அனுபவம்.

இந்தப் பசைத் தட்டுப்பாடு, வாக்காளப் பெருமக்களின் கருத்தை, கவனத்தை, அவர்களின் அபிலாஷைகளைக் கவரும் "பசை"த் தட்டுப்பாட்டைக் குறிக்கின்றதெனின் அது மிகையாகாது.

முந்தநாள் இன்னொரு வகையிலும் முக்கியத்துவம் நிறைந்ததாகும். பாராளுமன்றத்தில் கிராமோதய சபைகளை அமைக்க உதவும் அபிவிருத்திச்சபைகள் (திருத்தம்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

நாட்டின் எதிர்கால அரசியல்வாழ்வு இதிற் பெரிதும் தங்கியிருப்பதாகப் பிரசாரஞ்செய்தவரும் அரசு, இதனைப் பாராளுமன்றத்தில் விவாதித்தபோது, எதிர்க்கட்சியினரின் கண்டனத்தை நிராகரிக்கும் அதேவேளையில், தாம் வெளியிட்ட முத்திரையின் - அரிய கருத்தின் - முக்கிய அம்சமான பசையை உடயோகிக்கத் தவறிவிட்டது.

காரணம்: கருத்துப்பரிமாறுதலுக்குரிய பசை தட்டுப்பாடு. பாராளுமன்றம் வேறு, பொதுமக்கள் வேறு என்றும், கிராமோதய சபை வேறு, கிராமம் வேறு என்பது முடிவு கட்சி வேறுபாட்டைக் கைவிடக்கோரும் அரசு, அக்கருத்தை வெளியிடும் தபாலுக்கு முத்திரைமட்டுமல்ல, பசையையும் போதியளவு தேடி விநியோகிக்க வேண்டும்.

## பரிதாப விபத்து

ஏழ்பது மாணவரும் மூன்று ஆசிரியர்களும் பஸ் மூலம் பாடசாலைச் சுற்றுலாவில் சென்ற பயணம் கோரவிபத்தில் முடிந்தது.

கண்டி-மஹியங்கான வீதியில் கண்டிக்கு 22 மைலுக்கப்பால் நடந்த இந்தப் பயங்கரவிபத்தில் எட்டு மாணவரும் மூன்று ஆசிரியர்களும் உயிரிழந்தனர். குறைந்தபட்சம் 15 மாணவர் மோசமான காயத்துக்குள்ளாகினர். இறந்தவர்களின் சடலங்கள் தெல்தெனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கும் சோகக் காட்சி எத்தனைக்கெட்டாத கண்ணீர் அஞ்சலி போதுமானதா?

வீதியின் மயிர்ப்பின்னலில் சாரதி வண்டியைத் திருப்பும் நுட்ப வேளையில் ஏற்பட்ட தவறே இந்த துன்பியல் நாடகத்துக் காரணமென்று செய்தி குறிப்பிடுகிறது.

இவ்வித சுற்றுலாக்கள் பாடசாலைகளின் கல்வித் திட்டத்தின் முக்கிய அம்சமாகும், இவை மிகப் பொறுப்புடன் ஒழுங்குபடுத்தப்படவேண்டும்; இதில் பங்குபற்றும் பாதிக்கள் அனைவரும் - வண்டியின் தரம், சாரதியின் திறமை உட்பட நன்கு ஆராய்ந்தெடுக்கப்பட்டவையாகவிருக்க வேண்டும்.

இவற்றை நம் வற்புறுத்துவதால் குறித்த விபத்தில் இவற்றில் எதுவும் குறைவுடையதென நாம் கருதவில்லை; அது விசாரணையின் விளைவாக அமைய வேண்டியது. நாட்டில் பல இடங்களிலும் வீதி விபத்து பயங்கர நிலைமையை அடைந்திருக்கிறது. மலைநாட்டுச் சுற்றுலா வென்றால் அது விசேட கவனத்துக்குரியது

விபத்துக்கள் பெருகிவர நாட்டில் நிலைபரங்கள் மலிந்துவருகின்றன. மக்கள், பாதசாரிகள், சாரதிகள் புத்திசாலித்தனமாக நடக்கத் தவறினால் நிலைமை இன்னும் மோசமாகும்.

வீதிகளில் விபத்தைத் தடுக்க சட்டவிரோத நடவடிக்கைகளை திவிரப்படுத்துவதும் அவசியம்.

(புலோலி)

வடபிராந்திய இ. போ. ச. வில் கடமையாற்றிய திரு கே. யோகராசா பருத்தித்துறை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலை அதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ)

# தேர்தல் ஆட்சேப வழக்கு: 20-ம் திகதிக்குபின் தாக்கல்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபை தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டதாக தமிழ் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

சிரேஷ்ட சட்டத்தரணிகளைச் சந்தித்து ஆலோசனை நடத்துவதற்காக கொழும்பு சென்ற இரு தமிழ் காங்கிரஸ் தலைவர்கள், சிலசாட்சியங்களை சேகரிப்பதற்காக திரும்பியுள்ளதாகவும் தேர்தல் ஆட்சேப மனு தயாரென்றும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் முடிவுகள் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டவுடன் தாக்கல் செய்யப்படும் என்றும் தமிழ் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 20ம் திகதி மாவட்ட அபிவிருத்தி சபைகள் இயங்க ஆரம்பிக்கும் பட்சத்தில் 20ம் தேதிக்கு பின், எந்நேரமும் மனுதாக்கல் செய்யப்படலாம் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

## மக்கள் கருத்து

### யா. ப. நோ. கூ. சங்க செய்தி பற்றி செயலாளர்

யாழ். ப. நோ. கூ. சங்கம் 20 லட்சம் ரூபாய் மோசடி விசாரணை ஆரம்பம் என்ற தலைப்பில் 2-7-81ல் வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் மேற்படி விடயம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

திரு அல்பிரட் துரையப்பா யாழ் மாநகர ப. நோ. கூ. சங்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் கூப்பன் புள்ளி மோசடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது உண்மையே. சங்கத்திற்கு அந்த மோசடியில் சம்பந்தமில்லையென்று உணவு ஆணையாளர் 1975 ஜூனை மாதமே அறிவித்துவிட்டார். இருந்தும் இம்மோசடி சம்பந்தமாக கிளை முகாமையாளர்கள் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு விசாரணை அதிகாரியினால் விசாரணைக் குட்படுத்தப்பட்டு அவ்வூழியர்கள் யாபேரும் நிரபராதிகள் எனத் தீர்ப்பும் வழங்கியுள்ளார். எப்பவோ முடிந்துபோன 20 லட்சம் ரூபா மோசடி சம்பந்தமாக இச்சங்கத்தில் ஒரு விசாரணை நடைபெறவும் இல்லை. அப்படியான ஒரு மோசடி இடம்பெறவும் இல்லை.

உணவுமுத்திரை ரூ 11,895/ காணாமல் போனது சம்பந்தமாக, சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தர்கள் விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளனர் இவ்விசாரணைதான் இப்பொழுது சங்கத்தில் ஆரம்பமாகியுள்ளது இவ்விசாரணையோடு 20 லட்சம் ரூபாய் மோசடி சம்பந்தப்படும்படியாக செய்தியில் தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது இவ்விசாரணையின் பெறுபேறுகள், விசாரணைகள் முடிந்தால்தான் தெரியவரும்

சங்கத்தின் பல சிரேஷ்டர்கள் சம்பந்தமான 46(1) விசாரணை ஒன்றை நடத்தக்கோரி கூட்டுறவு ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுக்க எமது தொழிற்சங்கம் ஆலோசித்து வருகின்றது

இரா லோகநாதன்
செயலாளர்,
யாழ். கிளை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
யாழ்ப்பாணம்.

## இந்தக் காரை பொலிசார் தேடுகின்றனர்

(நல்லூர்)

ஸ்ரீ லை 7320 இலக்கம் கொண்ட மோட்டார் வாகனத்தை யாழ். பொலிசார் தேடிவருகின்றனர். இந்த வாகனத்தை எங்குகண்டாலும் அது பொலிசாரால் கைப்பற்றப்படும்

பிரத்தியோக பாவனைக்கார் ஒன்று போக்குவரத்து திணைக்களத்தில் பதியப்பட்ட இந்த வாகனம் உருமாற்றப்பட்டு யாழ்ப்பாணத்தில் பிரயாணிகள் வாடகைப் பாவிக்கப்பட்டு வருவதாகக்கிடைத்த தகவலையடுத்து, இந்த வாகனத்தைக் கைப்பற்றுமாறு மோட்டார் திணைக்கள ஆணையாளர் யாழ். பொலிசைக்கோரியுள்ளார்.

இதனையடுத்து யாழ். பொலிசார் பிரஸ்தாப வாகனத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாகனம் கைப்பற்றப்படும்பட்சத்தில் யாழ். மோட்டார்வாகனப் பரிசோதகரின் சோதனைக்குட்படுத்தி, அவரது அறிக்கையைத் தமக்கு சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் யாழ் பொலிசைக்கேட்டுள்ளார்.

இந்த வாகனம் அச்சுவேலியைச்சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானதாகும்.

## மாவை முருகன் திருவிழா

மாருதப்புர வீகவல்லி யெனும் பாவை
மனம் நொந்து நிலைகூறப் பிணிதீர்த்த பெருமான்
பாருய்ய வீதிவலம் வருகின்ற விழாவைப்
பார்த்துய்ய வாருங்கள் அன்பரென அழைப்போம்

★

கைகளிலே மலர்கொண்டு வருவார்கள் சிலபேர்
கண்களிலே நீர்கொண்டு வரம் கேட்பார் சிலபேர்
பொய்யறியா மனத்தினிலே உறைகின்ற முருகன்
புகழ்பாடி வீதிவலம் வருவார்கள் சிலபேர்

★

முருகனது விழாக்காண்போர் கண்ணுடையோர் ஆவார்
முருகனது புகழ்புரிவோர் நாவுடையோர் ஆவார்
முருகனது விழாக்களில் விரதங்கள் கொள்வோர்
முத்தியெனும் பேரின்பம் தப்பாமல் உறுவார்

(மாவிட்டபுரம் முருகன் ஆலய திருவிழா ஆரம்பமாகி நடைபெறுகிறது.)

—சிவம்

### நாடும் நடப்பும்

யாழ்ப்பாணத்தில் திவைத்துக் கொள்ளையடிக்கப்பட்டுச் சேதமடைந்த கட்டிடங்களில் ஒரு சிலவற்றைத் தவிர பலவர்த்தக நிறுவனங்களும் புனரமைக்கப்பட்டு வியாபாரம் நடைபெற ஆரம்பித்துள்ளது.

கொழும்பிலிருந்து இரண்டு தினங்களுக்குமுன் வந்த ஒருவர் பஸ் நிலையத்தில் உடைக்கப்பட்ட எரிக்கப்பட்ட கடைகளைக் காணோமே என்றார்.

"நீங்கள் எல்லோரும் வந்து பார்க்கும்வரை அவற்றை அப்படியே வைத்திருக்க வேண்டுமோ?" என்று அவரது நண்பர் அவருக்குக் கூறிவிட்டு எரிந்த உடைந்த கட்டிடங்கள் எல்லாவற்றையுமே நினைவுச் சின்னங்களாக வைத்திருந்தால் கடைசியில் சில பட்டினித் தமிழர்கள்தான் மிஞ்சுவார்கள் என்றார்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் கடைகளைத் திருத்துவதற்கும் பொருள்களை வாங்குவதற்கும் அரசாங்கம் நிவாரண மேதும் வழங்கும் தானே என்று கொழும்பு நண்பர் சொன்னதும் கிடைக்கும் கிடைக்கும்! என்ற நமது நண்பர் நிவாரண உதவி யாருக்கு கிடைக்கும் எப்போது கிடைக்கும் எவ்வளவு கிடைக்கும் என்பதெல்லாம் சொல்ல முடியாத விஷயம் என்றார்.

77-ம் ஆண்டுக் கலகத்தில் வழங்கப்பட்ட சிறிய பண உதவிகூட பாதிக்கப்பட்டவர்களைவிடப் பாதிக்கப்படாதவர்களுக்குத்தான் பெரும்பாலும் கிடைத்தது.

0 0 0

அரசாங்க எம். பிக்கள் கொழும்பில் தங்கியிருக்காது தங்கள் தங்கள் தொகுதிகளுக்குச் சென்று ஐக்கியதேசியக் கட்சிப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன யோசனை கூறியிருக்கிறார் அவரின் சமீபகாலப் பேச்சுக்களைப் பார்த்தால் விரைவில் பொதுத்தேர்தல் வரும்போல் தோன்றுகிறது! தேர்தல் வரட்டும் யாழ்ப்பாணத்தில் நடந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் போல் நடைபெறுமலிருந்தால் சரி!

0 0 0

தலைவர் அமிர்தலிங்கம் வெளிநாடு போனால் அது பெரும் சர்ச்சைக்குரிய பிரச்னையாகிவிடுவது வழக்கம். பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதபோது தந்தை செல்வாவுடன் இந்தியா சென்றார். அப்போதும் பிரச்னைதான். டில்லி செல்லாமலே இருவரும் திரும்ப வேண்டியேற்பட்டதாக ஞாபகம்.

எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் அமெரிக்கா சென்று திரும்பினார். இங்கு பாராளுமன்றத்திலும் வெளியேயும் பெரிய சர்ச்சை. பாராளுமன்றத்தில் 78ம் ஆண்டில் என்று நினைக்கிறேன் வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் அமிர் பேச எழுந்தது அரசாங்க உறுப்பினர்கள் கூச்சல் போட்டு அவரைப் பேசவிடாமல் தடுக்கப் பார்த்தனர் எல்லோருடைய குரலையும் அடக்கி அமிர் பேசினார்.

இப்போது போலவே வெளிநாட்டு உதவி கிடைக்காமல் தடுப்பதற்கு அமிர் முயற்சி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

வெளிநாட்டு உதவி இலங்கைக்குக் கிடைக்கக்கூடா

[4-ம் பக்கம் பார்க்க]

பெங்களூரில் பரிதாபம்:

# விஷசாராயம் அருந்தி 132 பேர் பலி!

## 200 பேர் ஆபத்தான நிலையில்!

பெங்களூர் ஜுலை 8

பெங்களூரில் விஷச் சாராயம் அருந்து 132 பேர் பலியானர்கள். இவர்களில் 40 பேர் பெண்களாவர். விஷச் சாராயம் அருந்திய மேலும் 200 பேர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடக முதலமைச்சர் திரு. ஆர். குண்டுராவ் ஆஸ்பத்திரிக்குச் சென்று இவர்களைப் பார்வையிட்டனர். விஷச்சாராயம் அருந்தி இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கும்படி அவர் கர்நாடக அரசைப்பணித்துள்ளார்.

சட்ட விரோத சாராய முயற்சியை தமது அரசு ஒழித்துக்கட்டப்போவதாக திரு. குண்டுராவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விஷச் சாராயம் அருந்தி வீடுகளிலும் வெளியிடங்களிலும் பலர் மாண்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது.

சமீபகாலத்தில் இந்தியாவில் விஷச் சாராயம் அருந்தி அதிகமானோர் பலியானது இதுவே முதல் தடவையாகும். [வெ]

# ஹரிஜனர்களுக்கு இந்து மதத்தில் கதவடைப்பு

## அமைச்சர் வீரப்பன் கவலை

சென்னை ஜுலை. 8

"இந்து மதத்தில் ஹரிஜனங்களுக்கு கதவுகள் அடைக்கப்படுகிறது. ஏனைய மதங்களின் கதவுகள் ஹரிஜனங்களுக்கு திறக்கப்பட்டுள்ளது. இதனாலேயே ஹரிஜனங்கள் மதம்மாறி வருகின்றனர். இது குறித்து இந்து மதத்தலைவர்கள் சிந்திக்க வேண்டும்".

மேற்கண்டவாறு தமிழ்நாடு செய்தி அறநிலைத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் நாகர் கோவிலில் ஏழு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள கலியாண மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினார். (வெ)

ஈரானில்

# 'ராய்ட்டர்' ஸ்தாபனத்தை மூடுமாறு உத்தரவு!

தெஹ்ரான் ஜுலை 8

ஈரானிலுள்ள 'ராய்ட்டர்' செய்தி ஸ்தாபனத்தை மூடிவிட்டு நிருபர்களை 48 மணித்தியாலத்திற்குள் அங்கிருந்து வெளியேறுமாறு ஈரானிய அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஈரானிய அரசாங்கத்திற்குப் பாதகமான முறையில் இத்தாபனம் செய்திகளை வெளியிட்டு வந்ததமையினாலேயே இதனை வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளது. 'ராய்ட்டர்' செய்திஸ்தாபனம் கடந்த வாரம் ஈரானுக்குப் பாதகமாக பத்துக்கு மேற்பட்ட செய்திகளை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை ஈரானிலுள்ள தென்கொரியப் பிரதிநிதிகளையும் 48 மணித்தியாலயத்திற்குள் நாட்டை விட்டு வெளியேறுமாறு ஈரானிய அரசாங்கம் கேட்டுள்ளது. (வெ]

## பஸ் விபத்தில் 39 பேர் பலி!

புதுடில்லி ஜுலை 8

மிசோரமில் நடைபெற்ற பஸ் விபத்தில் 39 பேர் பலியாகினர் என்றும் 19 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

ராணுவத்துறை

## அமெரிக்கா ரஷ்யா சமபலம்

வாஷிங்டன், ஜுலை. 8

அமெரிக்காவிற்கும் ரஷ்யாவுக்கும் இடையில் ராணுவத் துறையில் சமபல நிலை ஏற்பட்டுள்ளது. கேந்திர அணு வாயுதங்களையில் ஏறத்தாள இந்த நிலையில் இரண்டு நாடுகளும் உள்ளன

இதனை அமெரிக்க ராஜாங்க காரியதரிசி அலெக்ஸாந்தர் ஹேய்க் வெளியிட்டார்.

இவ்விபரங்கள் முந்திய உத்தியோகபூர்வமான அறிக்கைகளிலிருந்து வேறுபட்டுள்ளது. கேந்திர அணுவாயுதத்துறையில் அமெரிக்காவின் தங்கியுள்ளதென்றே முன்னர் கூறப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

யாழ். வன்செயல்கள்

## எதிர்க்கட்சிகள் மகாநாடு

[கொழும்பு]

யாழ். வன்செயல்கள் குறித்து மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆராய்வதற்கு எல்லா எதிர்க்கட்சிகளும் கூடி ஆலோசிக்கவிருக்கின்றன.

இந்த மகாநாட்டைக் கூட்டுவதில் இனங்களுக்கிடையே நீதிக்கும் சமாதானத்திற்குமான இயக்கம் [மேர்ஜ்] இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது.

பெரும்பாலான எதிர்க்கட்சிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துவிட்டன என்றும், சுதந்திரக்கட்சியின் பதிலைத்தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் மேர்ஜ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அனேகமாக இப்மாதத்திறுதியில் இம்மாநாடு கொழும்பில் நடைபெறும்.

இதேவிஷயம் குறித்து ஆராய்வதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள எதிர்க்கட்சிகளின் மகாநாட்டை இம்மாதம் 18ம் திகதி 'மேர்ஜ்ஜின்' யாழ் கிளை கூட்டவிருக்கின்றது.

# வெற்றி - தோல்வி இல்லை

லண்டன், ஜுலை 8

ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே போட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2வது கிரிக்கட் டெஸ் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்த ஆறு டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்டில் ஆஸ்ரேலியா வெற்றி பெற்றது தெரிந்ததே.

ஸ்கோர் விபரம் இங்கிலாந்து 311, 265 - 8. ஆஸ்ரேலியா 345, 98 - 4. (இ)

ஆப்கான்

## எதிர்ப்புரட்சியாளருக்கு சி. ஐ. ஏ. உதவி

மாஸ்கோ, ஜுலை, 8

"சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை ஆப்கான் எதிர்புரட்சியாளர்களுக்கு விரைவில் அமெரிக்கா வழங்கப்போகிறது. இந்த ஆயுதங்கள் இப்பொழுது எகிப்தில் சேகரிக்கப்படுகின்றன." என்று "நியூடைம்ஸ்" வார இதழ் கூறுகிறது.

இதுகுறித்து 'நியூடைம்ஸ்' வெளியிட்ட செய்தியில்: "அண்டைநாடுகளுடன் உறவுகளைச் சகஜமாக்குவது குறித்து அண்மையில் ஆப்கான் அரசு வெளியிட்டுள்ள பிரேரணை குறித்து அமெரிக்கா மௌனம் சாதிக்கிறது. உலகின் பிற பிராந்தியங்களைப் போலவே அந்தப்பிராந்தியத்திலும் பட்டம் அதிகரிக்க அமெரிக்கா விரும்புகிறது. இது இன்றைய அமெரிக்க அரசின் ஆக்கிரமிப்பு வெறி கொண்ட அயல்துறைக் கொள்கைக்கு முற்றிலும் இசைந்ததே." என்று தெரிவித்துள்ளது.

சி ஐ ஏ ஏஜன்டுகள் ஆப்கான் எதிர்புரட்சியாளர்களுக்கு ஆணையிடுகின்றனர் என்றும் அவர்களுக்கு ஆயுதங்களும், பணமும் கொடுத்து ஆப்கானிஸ்தானுக்குள் அனுப்புகின்றனர் என்றும் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஒருவர் விபரம் தெரிவித்துள்ளதாக "லிடரரி கஜட்" எனும் சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## ப. நோ. கூ. சங்க கடையில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் கீழ் இயங்கும் ஏழாலை மேற்குக்கிளையின் விற்பனை நிலையத்தை உடைத்து 1600 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் திரு. விஜயசேகர தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [மா]

## கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பலாலி வீதி, நாவலர் வீதி சந்தியில் கடையொன்றில் நேற்று முன்தினமிரவு பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 5000 ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளனவாம்.

கடையின் முன்கதவு உடைக்கப்பட்டு இத்திருட்டு நடைபெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணையிலீடுபட்டுள்ளனர். (ஈ)

# ரமழான் சிந்தனை

நீங்கள் பிறைகண்டு நோன்பு பிடியுங்கள். பிறை கண்டே நோன்பை விடுங்கள். பிறை உங்களை விட்டும் மறைக்கப்பட்டு விட்டால் பிறை 30 ஆக நீங்கள் கணக்கிட்டுக் கொள்ளுங்கள் என நபிகள் (ஸல்) நவின்றுள்ளார்கள்.

(நூல். புஹா உல்மராம்)

தொகுப்பு: மௌலவி பௌசியா கலீம்

# மேற்கு லண்டனில் கலவரம்: பிரிட்டிஷ் பிரதமர் கவலை

லண்டன், ஜுலை, 8

மேற்கு லண்டனிலுள்ள லிவப்பூர் நகரில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்று வரும் இனக்கலவரம் குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கரட் தட்சர் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

மேற்கு லண்டனில் ஆசிய இளைஞர்களுக்கும், வெள்ளைக்கார இளைஞர்களுக்குமிடையே கடந்த சில தினங்களாக மோதல்கள் இடம்பெற்றுவருவதும், அதனைத் தொடர்ந்து இங்கு பல தீவைப்புச் சம்பவங்களும் நடைபெற்றுவருவது தெரிந்ததே.

இச்சம்பவத்தின்போது களஞ்சியசாலையொன்று தீக்கிரையாக்கப்பட்டதுடன், இங்குள்ள நவீன சந்தையும் தாக்கப்பட்டது. இதுதொடர்பாக 70 பேர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (வெ)

' தபால் அத்தியட்சகர் மரணவிசாரணை:

# இராணுவத்தினர் தன்னை உலுப்பியதாக கூறினார்"

## தனியார் டாக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நவரத்தினத்தை நான் பரிசோதனை செய்தேன். அவர் அன்று அதிகாலை இராணுவத்தினர் தன்னை நெஞ்சில் பிடித்து உலுப்பி அடித்ததினால், நெஞ்சு வலிப்பதாகவும், உடம்பு நோவதாகவும் கூறினார்."

இராணுவ விசாரணைக்குப் பின் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமான உரும்பராயைச் சேர்ந்த மூன்றாவது தபால் அத்தியட்சகர் நவரத்தினத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த உரும்பராய் தனியார் ஆங்கில வைத்தியசாலை டாக்டர் பி. சிவபாலன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. போகநாதன் முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெற்றது.

டாக்டர் சிவபாலன் மேலும் கூறியதாவது:-

"இராணுவத்தினர் தான் அணிந்திருந்த பெனியனைப் பிடித்து உலுப்பியதாகவும், தான் இரண்டுதரம் விழுந்ததாகவும் என்னிடம் கூறினார். நான் அவரைப் பரிசோதித்த போது அவரின் உடம்பு குளிர்ந்தபடியிருந்தது என்னிடம் அவர் மருந்து கேட்டார். அவரின் நிலைமை மோசமானதாக இருந்ததால், உடனடியாக யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படி சொன்னேன். அன்று காலையும் யாழ். ஆஸ்பத்திரிக்கு போனதாகக் கூறினார் இரவுக்காவது மருந்து தரும்படி கேட்டார். நான் கட்டாயமாக ஆஸ்பத்திரிக்குப் போகும்படி வலியுறுத்தினேன். அவர் கூறியபாதிரி பலமாக நெஞ்சில் பிடித்து உலுப்பியிலா எலும்பு முறிந்திருந்தால், அது இருதயத்தையும் பாதிக்கும்.

மேல்விசாரணை இம்மாதம் 15ம் தேதிக்குப் பின்போடப்பட்டது. (ஈ)

யாழ். மாநகரசபை

# புதிய பட்டியல் பற்றி காங்கிரஸ் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் பட்டியலை புதிதாக தயாரிப்பது பற்றி இம் மாதம் 18ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழ் காங்கிரஸ் செயல் கமிட்டியில் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

யாழ். மாநகரசபை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர் ஜனுப் காசிம், வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து புதிய பட்டியல் ஒன்று சமர்ப்பிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழ் காங்கிரஸின் அபேட்சகர் பட்டியலில் இருவர் வெளிநாடு சென்றிருப்பதாகவும், அவர்கள் திரும்பியதும், புதியபட்டியல் தயாரிக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

புதிய பட்டியலில் இளைஞர் சிலருக்கு முன்னிடம் அளிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது. [ஈ]

## விசேடகூட்டம்

(யாழ்ப்பாணம்)

நெறியாளர் குழுவமைப்பதற்கான தென்மராட்சி கிழக்கு பலநோக்குகூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இம்மாதம் 14ம் திகதி கொடிகாமத்தில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சங்கத்தலைவர் திரு. ஆ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் புதிய நெறியாளர்குழு தெரிவு செய்யப்படவிருக்கிறது

சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க இக்கூட்டம் கூட்டப்படுகிறது. (ஈ)

## நாடும் நடப்பும்--

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்று தாம் யாரிடமும் சொல்லவில்லையென்றும் இலங்கைக்கு வழங்கும் உதவியில் ஒருபகுதியாவது தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்கும் உபயோகப்படுவதற்கு கவனித்துக் கொள்ள வேண்டுமென்றே தாம் கூறியதாகவும் அமீர் பதிலளித்தார் அன்று சுமார் ஒன்றரை மணிநேரம் அமீர் பேசினார். ஈழத்தமிழர் பிரச்னையை மிகத் தெளிவாக எடுத்து விளக்கினார்.

ஆனாலும்.........

-ஊர்சுற்றி

# "எதிரிகளின் நடத்தை பற்றி அண்ணனிடம் முறையிட்டேன்"

## கொலை முயற்சி வழக்கில் பாடசாலை மாணவி லட்சுமிதேவி சாட்சியம்

[புலோலி]

"சம்பவதினம் நான் நித்திரையிலிருக்கும்போது வெடிச் சத்தமொன்று கேட்டு விழித்தேன். படுக்கையிலிருந்து எழுந்து வெளியே போகும்போது முன்னர்கேட்டதுபோன்ற இன்னொரு வெடிச்சத்தமும் கேட்டது. வெளியே ஒரே புகை மயமாக இருந்தது"

இவ்வாறுவல்வெட்டித்துறை கைக்குண்டு வீச்சு கொலைமுயற்சி வழக்கில் சாட்சியமளித்த ஊறணியைச் சேர்ந்த செல்வி விசாகரத்தினம் லட்சுமிதேவி (வயது 18) குறிப்பிட்டார். பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே எஸ் மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவரும் இவ்வழக்கில் தொடர்ந்து சாட்சியமளித்த லட்சுமிதேவி குறிப்பிட்டதாவது:

"1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5ம் திகதி எனக்குஞாபகமிருக்கிறது. அன்று பிற்பகல் 3 மணியளவில் எனது பெரியம்மா அன்னபாக்கியம். எனது அக்கா சந்திரகாந்தா வீட்டில் இருக்கும்போது "ஐயோ" என்ற சத்தம் கேட்டது. இச்சத்தம் கேட்டு அம்மாவும் அண்ணா சக்திவேலும் ஓடிப்போனார்கள், அப்போது இரண்டாம் எதிரி குணசீலன் பெரியம்மா அன்னபாக்கியத்திற்கு அடிப்பதற்காக சீலையில் பிடித்துக்கொண்டு நின்றார். அப்போது இரண்டாம் எதிரி குணசீலனை அண்ணா சக்திவேல் பிடித்தார். அதன்பின் பெரியம்மா அன்னபாக்கியத்தையும் எனது தகப்பனார் விசாகரத்தினத்தையும் அண்ணா சக்திவேல் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பினார்.

சம்பவதினமிரவு ஒன்பது மணியளவில் நான் படுத்துவிட்டேன் நான் நித்திரையிலிருக்கும்போது ஒரு சத்தம் கேட்டது வெடி போன்ற அந்தச்சத்தம் கேட்டதும்நான் நித்திரையால் விழித்தேன் பின்பு நான் வெளியே போகும் போது அதேபோல இன்னொரு சத்தமும் கேட்டது நான் வெளியே வந்தபோது ஒரே புகையாக இருந்தது. சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது பகீரதன் காயமடைந்திருந்தபடியால் அவரை தூக்கிவைத்திருந்தேன் அக்கா ஜமுனாகாந்தா காயப்பட்ட சண்முகவடிவேலையும் தயாளினியையும் தூக்கிவைத்திருந்தார். அக்கா அண்ணா அம்மா ஆகியோர் வெளியே கதைத்துக்கொண்டிருந்த போது காயப்பட்ட மூன்று பிள்ளைகளும் வெளிவிருந்தையில் படுத்திருந்தார்கள்.

பின்னர் தயாளினி சண்முகவடிவேல், பகீதரன் ஆகியவர்கள் காயப்பட்டவர்களை அக்கா ஜமுனா காந்தாவும் அம்மா தெய்வானைக்கனிவும் ஊறணி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்கள். வெடி வந்து விழுந்த இடத்தில் நிலம் வெடித்து நொறுங்கியிருந்தது. அதனில் சிறு, சிறு தகடுகள் போன்றன இருந்தன. மேல்சீற்றில் ஓட்டைகள் ஏற்பட்டிருந்தன.

நீதவான்: வீட்டில் வெடி போன்ற பொருள் வந்து விழுந்தபோது யார் அதை எறிந்தார்கள் என்று நீர் கண்டீரா? - இல்லை.

நீதி: அந்த நேரத்தில் அந்த இடத்தில் எதிரிகள் நின்றார்களா? - நான் காணவில்லை.

"பாடசாலைக்குச் செல்லும் வேளைகளில் இந்த மூன்று எதிரிகளும் சைக்கிளில் வந்து எனக்கு முன்னால் சீக்காய் அடித்து விட்டுப்போகும் வழக்கம் உண்டு. நான் வல்வை மகளிர் வித்தியாலயத்தில் படிக்கிறேன். அவர்கள் சீக்கா அடிப்பதோடு சைக்கிளை என்முன் நிறுத்தி என்னுடன் இடிப்பதுபோல் நடந்துகொள்வார்கள். இதுபற்றி நான் அண்ணா சக்திவேலுக்கு முறையிட்டபோது அவர் இந்த எதிரிகளின் பெற்றோர்களிடம் சென்று எச்சரிக்கை செய்தார்.

விசாரணை தொடர்கிறது.

## இளம் பெண் தற்கொலை

(கிளிநொச்சி)

நீண்டகாலமாக நெஞ்சு நோயினால் பாதிக்கப்பட்ட இளம்பெண் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

கோட்டைகட்டி னகுளத்தைச் சேர்ந்த கந்தர் வள்ளியம்மை [24 வயது] என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம் முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றபோது மரணமானவரின் தாய் சின்னத்தங்கம் சாட்சியமளிக்கையில், சம்பவதினம் குசினிக்குள் சமையல் வேலை செய்து கொண்டிருந்தபோது நெஞ்சு நோயினால் மகள் அவஸ்தைப் பட்டார் என்றும் அவஸ்தை தாங்க முடியாத நிலையில் குசினிக்குள் வைத்துக் கிருமிநாசினி அருந்தி மரணமானார் என்றும் கூறினார்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் திருமதி ஜி. கந்தசாமி பிரேத பரிசோதனையை மேற்கொண்டார். கிளிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. செல்வநாயகம் சாட்சிகளை ஆஜர் செய்தார். மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பளித்தார்.

(கொ

## சர்வசக்தி பீடத்தில் கும்பாபிஷேகம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் ஐ ஆ குளம் சர்வசக்தி பீடத்தில் புதிதாக உருவாக்கப் பெற்றுள்ள சித்தி விநாயகர், சர்வவல்லவாம்பிகை சமேதபரிபூரணானந்தர், வள்ளி தேவசேனா சமேதசுப்பிரமணியப்பெருமான், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்கு பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 13ம் திகதி திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ சுவாமிநாத இராஜகோபாலசர்மா மற்றும் ஆசாசாரியர்கள் உரையாற்றுவர்


நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப்பத்திரம் வெற்றுச்சாக்கு

எம்மிடம் 4000 [நாலாயிரம்] வெற்றுச்சாக்குகள் வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவத்திற்கு ரூபா 2/-ம், வைப்புப்பணமாக ரூபா 500/-ம் செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை 14-7-81க்கு முன் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள்யாவும் 21-7-81க்கு முன் பதிவுத்தபால் மூலம் சங்கத்தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பகாரர்கள் தபாலின் இடது பக்க மேல்மூலையில் "சாக்கு கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப நோ. கூ. சங்கம்
திருநெல்வேலி.
7-7-81

●260


## இன்றைய பலன்

ஆனி மாதம் 25 ம் திகதி
வியாழக்கிழமை
(9-7-81)

மேடம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும். இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும். மின்னியல்பகுதியில் கடமையாற்றுபவர்கள் கவனமாக இருக்கவும்.

இடபம்: வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும், களவிதிரவழியால் நன்மைகள் வந்து சேரும், நீண்டநாள் கனவு இன்று நனவாகும்.

மிதுனம்: புதிய தலையிடி தலைதூக்கும், வணிகர்கள் வாழ்க்கை சோதனை நிறைந்ததாக இருக்கும், மாணவர்கள் உணர்ச்சிவசப் படாதிருத்தல் நன்று.

கடகம்: மனம்போல்வாழ்வு, இன்று மலரும் கடமையாற்றுமிடத்தில சகதொழிலாளர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

சிங்கம்: பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவிஉயர்வுக்கு வழிகோலப்படும். சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக் கூடும். வருவாயும் கூடும்.

கன்னி: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும், முதியவர் ஒருவரின் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும்.

துலாம்: உறவு முறைகளில் வெடிப்பு ஏற்படும், பண விவகாரத்தின் மூலம் பகைதோன்றலாம், தொழில்துறையில் அதிக கவனம் செலுத்தவும்.

விருட்சிகம்: ஏமாற்று வேலைகள் இடம்பெறும், வியாபாரிகள் புதிய முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். குடும்பத்தில் அமைதி குன்றும், நன்கு ஆலோசித்த பின்பே எந்த நடவடிக்கையும் எடுக்கவும்.

தனு: பேச்சு வன்மையினால் பெரும்புகழ் கிடைக்கும், பெரிய இடத்துச் சிநேகம் உங்களுக்குச்செல்வாக்கைத்தேடித்தரும். வரவிலும் உயர்வு காணும்.

மகரம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம், வேண்டாத உறவுகளைத் தவிர்த்தல் நன்று.

கும்பம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், வாகனசுகத்துடன் வாழ்க்கை நலனும் உண்டு.

மீனம்: வட்டிக்கடை வைத்து இருப்பவர்களுக்கு மேலும் குட்டிபோடும், புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(சோதிடகலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை


வெஸ்லி (காங்கேசன்துறை)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
அரசிளங்குமரி

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
எங்க பாட்டன் சொத்து

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10-30, 2-30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஹரன் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு சுஜாதா
சென்ற ஆண்டு சிறந்த நடிகை
சரிதா நடித்த
சென்ற ஆண்டின் சிறந்த டைரக்டர்
K. பாலசந்தரின் நூல் வேலி [கலர்]

வின்சர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி, பத்மினி, ஜெயலலிதா, சுருளிராஜன், எஸ். வி. சுப்பையா
ஆதி பராசக்தி
(கலர்—புதிய பிரதி)

வெற்றிக்கொடி நாட்டும் 8 வது வெற்றிவாரம்
சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜோதா ★ சுந்தரராஜன் ★ மனோரமா
சட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
தினசரி 10-30 2-15, 4-45, 7-00, & 9-45
சுயெஸ்கா-SUJESKA
10-7-81 முதல்
ஒரு கை ஓசை

FINAL WEEK
RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30
Smashing 2nd Glorious Week
40,000 Patrons have seen within one week
See it TODAY
THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
விரைவில் வருகிறது
எம்.ஜி ஆர் - லதா
பல்லாண்டு வாழ்க

புரட்சி நடிகரை திரையில் காணத் துடிக்கும் எம். ஜி. ஆர். ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய இதோ
ராணி (யாழ்ப்பாணம்) 10-30, 2-15, 6-00, 9-30
எங்கள் தங்கம்
(புத்தம்புதிய பிரதி — கலர்)
எமது அடுத்த வெளியீடு
பாக்கியராஜாவின்
சுவர் இல்லாத சித்திரங்கள்

## உணர்வுகள் எரிவதில்லை! [7]

'பேனு' எழுதுவது

அன்று காலையில் 'என்ன செய்வது, ஏது செய்வது' என்று ஒன்றுமே தோன்றவில்லை;

எரிந்து மிஞ்சிய கட்டிடத்தையும் இரும்புகளையும், சாம்பலையும் ஊழியர்கள் பார்த்துப் பார்த்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு இருக்க, ஈழநாடு அனுதாபிகள் கவலை தோய்ந்த முகங்களுடன் வந்து பார்த்து எமக்கு ஆறுதல் கூறிக் கொண்டு சென்றார்கள்.

ஆசிரியர்கள், மாணவர்கள் பல்கலைக்கழக அன்பர்கள், அரசியல்வாதிகள், அரசாங்க அதிகாரிகள், கலைஞர்கள்; எழுத்தாளர்கள், கவிஞர்கள், வாசகர்கள் மாத்திரமல்ல சாதாரண பொதுமக்களும் திரள் திரளாக வந்து, ஆறுதல் கூறியதை நாம் மறப்பதற்கில்லை.

கனோடுதான் நான் செல்வது வழக்கம். அன்று பையில் ஒன்றுமில்லை. மனம் நிறைய சுமையுடன் வீடு திரும்பினேன்.

'ஈழநாட்டுக்கு என்ன நடந்தது' இதுதான் மனைவி என்னிடம் கேட்ட முதல் கேள்வி.

'ஒன்றும் நடக்கவில்லை'- இது என் பதில்.

ஆம்! ஈழநாடு கட்டிடத்தைத்தான் எரித்தார்கள்-அங்கிருந்த பொருட்களைத்தான் எரித்தார்கள். ஆனால் 'ஈழநாடு' பத்திரிகையின் உள் உணர்வை அவர்களால் எரிக்க முடியவில்லையே!

அந்த உணர்வு ஊழியர்கள் மத்தியில் மாத்திரமல்ல, நிர்வாகிகள் மத்தியில் மாத்திரமல்ல சம்பந்தப்பட்ட அனைவர் மத்தியிலும் கொளுந்து

### ஆறுதல்கூறிய அன்பர்கள்

பத்திரிகை மீண்டும ஆரம்பிக்கப்படுமா?

இதுவே கேள்வியாக இருந்தது.

'உடனடியாகவே ஆரம்பித்தாகவேண்டும்' என்று பிடிவாதமாக இருந்தார் இயக்குநர் திரு. சிவானந்தன்.

எங்கே ஆரம்பிப்பது, எப்படி ஆரம்பிப்பது-ஊழியர்கள் மத்தியில் மீண்டும் கேள்வி.

'கலாநிலைய அச்சகம் இருக்கிறது. அங்கு எல்லா வேலைகளையும் செய்யலாம்.'

திரு சிவானந்தன் ஆஸ்பத்திரியிலிருந்து தகவல் அனுப்பியிருந்தார்.

வேலைகளைத் தொடங்குவதற்கு எல்லாருமே ஆயத்தம்தான்-ஆனால் பதற்றம் தணியாத நிலையில் உடனேயே பத்திரிகை வெளிவருவதைக் கண்டு விஷமிகள் மீண்டும் கைவரிசையைக் காட்டினால் என்ன செய்வது!

இது ஊழியர்களின் அங்கலாய்ப்பு.

'எதற்கும் பெரியவருடன் ஒருவார்த்தை கலந்துகொள்வோம்' -இது முகாமையாளர் திரு சினிவாசகத்தின்யோசனை.

கண்வைத்திய நிபுணர் ஆனந்தராஜனும் வந்தார். பத்திரிகையை உடனே எப்படியும் வெளியிடும்படி ஆலோசனை கூறினார்.

பொது முகாமையாளர் திரு. சினிவாசகம் அதற்குள் பெரியவர் திரு. தங்கராஜாவுடன் பேசிவிட்டு வந்துவிட்டார். உடனே பத்திரிகையை வெளியிடவேண்டும் என்றே பெரியவரும் விரும்புவதாக தகவல். என்னமுறையில், எந்தவிதமாக செயல்படுவது என்பது பற்றிய ஆலோசனையையும் அவர் தெரிவித்ததாக அறியமுடிந்தது.

அன்று நேரமாகிவிட்டது. அடுத்தநாள் வேலையை ஆரம்பிப்பது என்பது முடிவு. ஊழியர்கள் திரும்பிவிட்டார்கள்.

### ஒன்றுமே நடக்கவில்லை!

வழக்கமாக யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிச் செல்லும் போது பை நிறைய சாமான்

விட்டு எரிவதைக் கண்டபின்னர் 'ஈழநாடு'க்கு ஒன்றும் நேரவில்லையென்று நான் கூறியதில் தவறொன்றுமில்லை அல்லவா!

ஏற்கனவே அவவுக்கு தகவல் தெரிந்திருக்கிறது, அறிந்தவற்றை உறுதிசெய்துகொள்வதற்காகத் துருவித்துருவிக்கேட்கிறாள். எவ்வளவு நேரம்தான் மறைப்பது?

கட்டிடம் எரிந்தது. யந்திரங்கள்' 28 வருட பதிவேடுகள்-ஊழியர்களின் உடமைகள். சைக்கிள்கள்-இயக்குநரின் ஹொண்டா- எனது புதிய சைக்கிள். மேசையில் இருந்த புத்தகங்கள் - பாஸ்போர்ட்டுகள்-நான் எழுதி பத்திரிகைகளில் வெளிவந்த கதைகளின் பைல்கட்டுகள்- இப்படி எரிந்த எல்லாவற்றையும் விபரிக்கிறேன்.

'பக்கத்துவீட்டில்'சரோ'வும் அம்மாவும் எப்படி இருக்கிறார்கள்' மனைவி மிகவும் உருக்கத்தோடு கேட்கிறாள்.

திரு. தங்கராஜாவின் சகோதரியின் புத்திரிதான் நாங்கள் அன்புடன் அழைக்கும்'சரோ'.

'வீட்'டன்' பக்கத்தில் - ஒரே வளவில் உள்ள 'ஈழநாடு' பெரிய கட்டிடம் கொளுந்து விட்டு எரிந்தபொழுது கணவர் ஊரில் இல்லாதநிலையில் இரு குழந்ததகளோடும் வயதான தாயாரோடும் அவர் எவ்வளவு சங்கடத்துக்குள்ளாகியிருப்பார் என்று என் மனைவி ஆதங்கப்படுகிறாள்.

உண்மையில், ஈழநாடு காரியாலயத்துக்கு தீ வைத்தவர்கள் முதலில் அவர்கள் வீட்டின் ஜன்னலைத் தாக்கி உடைத்திருக்கிறார்கள். வீட்டுக்குள்ளும் புகுந்து பயமுறுத்தியிருக்கிறார்கள். அது ஒரு வீடு என்று கண்டதின்பின்னரே 'ஈழநாடு' காரியாலயத்துக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

[நாளை முடியும்]

உலக வங்கியிடம்

# அமிர் உதவிகேட்கமுடியாது, மாவட்டசபை கேட்கலாம்

## இரவில் கூட்டணியுடன் உறவு கொள்ளும் சுதந்திரக்கட்சி பகலில் பந்து விளையாடுகிறது

### சபையில் பிரதமர் கண்டனம்

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமோ மற்றும் ஒரு தனி நபரோ மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு உலக வங்கியிடமிருந்தோ அன்றி வெளிநாடுகளிடமிருந்தோ உதவி பெறமுடியாது. தேவையானால் மாவட்ட அபிவிருத்தி சபைகள் தீர்மானித்த பின்னர் நிதி அமைச்சரினதும் மாவட்ட சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரத்துடனேயே மாவட்ட அபிவிருத்தி சபைகள் இந்த உதவியைப் பெறமுடியும்.

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

பிரதேச சபைகள், கிராமோதய சபைகள் ஆகியவற்றை அமைப்பதற்கான அபிவிருத்தி சபைகள் திருத்தச் சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்துப் பேசிய பிரதமர் மேலும் கூறியதாவது:

இந்த நாட்டைப் பிரிக்கவோ அன்றி யாழ்ப்பாண மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு உலக வங்கியிடம் கடன் உதவி கோரவோ நாம் திரு. அமிர்தலிங்கத்திற்கு அனுமதி வழங்கவில்லை.

இந்த நாட்டைப் பிரிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை.

#### இரவில் கூட்டணியுடன் உறவு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இரவில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் படுத்து உறங்குகிறது. பகலில் மக்களுடன் பந்து விளையாடுகிறது. சுதந்திரக்கட்சி பகலில் ஒரு வேடம்; இரவில் ஒரு வேடம் போடுகிறது.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் தமிழர் கூட்டணிக்கு ஆதரவு அளித்துவந்த சுதந்திரக்கட்சி--

#### சுதந்திரக் கட்சி பொய்ப்பிரசாரம்

யாழ். மாவட்டத்தை அபிவிருத்திசெய்வதற்கு திரு, அமிர்தலிங்கம் அமெரிக்காவிடமும், உலக வங்கியிடமும் உதவி கோருவதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம் வழிவகுத்துவிட்டதென்றும், இதற்கு ஐ. தே. க. அரசுதான் காரணமென்றும் சிங்கள மக்கள் மத்தியில் பொய்ப்பிரசாரம் செய்துவருகிறது. சுதந்திரக் கட்சியின் இரட்டை வேடம் ஒருபோதும் பலிக்காது.

### பரமேஸ்வரன்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறினார்.

இவ்விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்றது.

டாக்டர் திருமதி ரஞ்சினி ராஜராஜேஸ்வரன் சாட்சியம் அளிக்கையில் மேலும் கூறியதாவது:

யாழ். அரசினர் பிரேதச்சாலையில் கடந்த மாதம் 4ந் தேதி பரமேஸ்வரனின் சடலத்தில் பிரேத பரிசோதனை நடத்தினேன்.

சடலத்தில் 8 வெளிக்காயங்கள் காணப்பட்டன. 2ம் காயத்திலிருந்து 7ம் காயம் வரை துப்பாக்கிச் சன்னங்கள் வெளியேறிய காயங்கள்.

இறந்தவர், 6 அடி அல்லது அதற்குக் குறைந்த தூரத்தில் இருந்துதான் சுடப்பட்டிருக்கலாம். வெளிக் காயங்கள் வலது பக்கக் கையிலும், வலது பக்க மார்பிலும் காணப்பட்டன. வெளிக் காயங்களை அவதானிக்கும்போது சுடப்பட்டவர் அவரது வலது பக்கத்திலிருந்தே சுடப்பட்டிருக்க வேண்டும்.

விசாரணையின் பின் நீதவான் கொலையெனத் தீர்ப்பளித்து, விசாரணைப் பிரதிகளைச் சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்குமாறு பணித்தார்.

[ச-இ]

### வர்த்தமானியில்...

[ ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரின் செயலாளர் திரு. ஆர். பேரின்பநாயகம் அரசாங்க அழுத்துநர் திரு. நெவில் நாணயக்காராவுடன் தொடர்கொண்டபோது மேற்படி தேர்தல் முடிவுகள் தேர்தல் ஆணையாளரிடமிருந்து தமக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

அடுத்து திரு. பேரின்பநாயகம் தேர்தல் ஆணையாளர் திரு. எம். ஏ பியசேகராவுடன் தொடர்புகொண்டபோது அம்முடிவுகளைத் தான் ஜூன் 23-ம் திகதியே வர்த்தமானி பிரசுரத்திற்காக அனுப்பிவிட்டதாகவும் தெரிவித்தார்.

மீண்டும் அழுத்துநரிடம் விசாரித்தபோது தமக்கு அம்முடிவுகள் கிடைக்கவில்லை என்றும் விரைவில் அவற்றை நேரடியாகப் பெற்று இன்னும் ஓரிரு தினங்களில் வர்த்தமானியில் பிரசுரிப்பதாகவும் திரு. நாணயக்காரா உறுதியளித்துள்ளார்.

[இ]


## மரண அறிவித்தல்



### கே. ரி. வேலுப்பிள்ளை

வறணி ஊரைச் சேர்ந்தவரும், வியாங்கொடை வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ், திவுலப்பிட்டி கணேசன் ஸ்ரோர்ஸ், உரும்பராய் கே. ரி. வி. சுருட்டுத் தொழிற்சாலை உரிமையாளருமான திரு. கே. ரி. வேலுப்பிள்ளை காலமானார்.

இவர் திருமதி தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும். சண்முகநாதன், திருமதி நாகபூஷணி அம்மாள், கணேசநாதன் [துபாய் வங்கி லிமிற்றெட் கொழும்பு], சிவநாதன் [ஜெர்மனி] ஆகியோர்களின் அருமைத் தந்தையும் திருமதி சுந்தரராணி, சண்முகநாதன், நாகரத்தினம் [இலங்கை வங்கி புறக்கோட்டை] ஆகியோரின் அன்பு மாமனுமாவர்.

அன்னாரின் ஈமச்சடங்கு இன்று [9-7-81] வியாழக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் உரும்பராய் தங்கவேல் மாளிகையில் நடைபெற்று அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பராய் வேம்பன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

மக்கள் மருமக்கள்,
தங்கவேல் மாளிகை,
உரும்பராய்.

0267



## அறிவித்தல்

பழுதடைந்த கார் ரயர்கள் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்றன. இவற்றை விநியோகம் செய்யக்கூடியவர்கள் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை விநியோக உத்தியோகத்தருடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொழிற்சாலை முகாமையாளர்.
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
1981-07-08

0268


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office SriLanka. Regd No. QB 100236/81. P. O. Box 49. Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707